# புஷ்பராஜாவின் நினைவுகள்



மரணத்தைக் கண்டு நாம் அஞ்சவில்லை
ஓர் அனாதையாய்
ஓர் அடிமையாய்
புதிய எஜமானர்களுக்காக தெருக்களில்
மரணிப்பதை வெறுக்கிறோம்.
- செழியன்

அண்மையில் வெளிவந்த ஆனந்த விகடனில் “விடை பெறக் காத்திருக்கிறேன்” என்ற தலைப்பில் ஒரு செய்தி வாசிக்க நேர்ந்தது அதில் புஷ்பராஜா, தான் இன்னமும் மூன்று மாதங்கள்தான் உயிர் வாழமுடியும் எனவும், தனக்கு இன்னும் எட்டு மாதங்கள் தேவைப் படுவதாகவும் குறிப்பிட்டார், ஏன் அந்த எட்டு மாதங்கள்? புஷ்பராஜா இரண்டு புத்தகங்கள் எழுத வேண்டியுள்ளதாகவும் அது எழுதிமுடிந்தால் தனது கடமையை நிறைவேற்றிய திருப்தியுடன் மரணிக்கத் தயார் எனக் குறிப்பிட்டிருந்தார்.

யார் இந்த புஷ்பராஜா? இன்றைய இளைய தலைமுறைக்கு எவ்வளவு இவரைப்பற்றித் தெரியும்? தமிழர் பிரச்சனை ஆயுதப் போராட்டமாக மாறிய காலகட்டத்தில் இவரின் பணி முக்கியமாக காணப்பட்டது. சிவகுமாரனின் தலைமையிலான தமிழ் மாணவர் பேரவை, தமிழ் இளைஞர் பேரவை மற்றும் தமிழீழ விடுதலை இயக்கம் (இதன் பெயரை பின்னர் குட்டிமணி, புஷ்பராஜவிடம் வாங்கி தமது இயக்கத்திற்கு சூட்டிக் கொண்டார்) போன்ற அமைப்புக்களில் முக்கிய பொறுப்புகள் வகித்தார்.

இந்தக் காலகட்டத்தில் இவர் பல நாட்களை சிறைச்சாலைகளிலும், சித்திரவதைக் கூடங்களிலும் கழித்தார். அப்போது சித்திரவதைக்குப் பெயர்போன பஸ்தியாம் பிள்ளையின் விசாரனையில் பல தடைவை உட்பட்டிருந்தார். மிதவாத தலைமையான தமிழ் விடுதலைக் கூட்டனியுடனும், ஆயுதப் போராட்ட அமைப்புக்களில் உள்ள பல நபர்களுடன் இவர் உறவுகளை வைத்திருந்தார். குறிப்பாக குட்டிமணி, தங்கத்துரை, பிரபாகரன், சிறிசபாரத்தினம், உமாமகேஸ்வரன், பத்மநாபா போன்றவர்களுடன் தொடர்புகள் வைத்திருந்தார்.

இவரின் அரசியல் நடவடிக்கைகளினால் இவரது குடும்பமும் பெரும் சிரமங்களுக்கு உள்ளானது. புஸ்பராஜாவினது இரண்டு சகோதரிகள் மற்றும் தம்பியார் ஆகியோர் சிறைவாசம் அனுபவித்தார்கள்.

1980 ஆம் ஆண்டளவில் பிரான்ஸ் நாட்டுக்கு புலம் பெயர்ந்த இவர் அங்கும் அரசியல், கலை, இலக்கிய நகழ்சிகள் நடத்தினார். அங்கு இவர் ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கத்திற்காக வேலை செய்தார். அங்கு அமிர்தலிங்கத்தின் நினைவஞ்சலிக் கூட்டத்தையும் நடத்திய பெருமை இவரைச்சாரும்.

ஈழப் போராட்டத்தின் ஆரம்பகாலப்பகுதியில் மிகத்தீவிரமாக ஈடுபட்டவர் என்ற ரீதியில் ஆயுதப் போராட்டத்தின் ஆரம்பங்களில் நடந்த சம்பவங்கள் தவறுகள் உட்கொலைகள் என்பனவற்றை புஸ்பராஜா அறிந்திருந்தார். இவர் எழுதிய ஈழப்போராட்டத்தில் எனது சாட்சியம் என்னும் நூல் பல உண்மைகளை வெளிவரச்செய்திருந்தது. அத்துடன் வரலாற்றிலிருந்து மறைக்கப்பட்ட பலரின் பெயர்கள் பதிவு செய்யப்பட்டிருந்தது. தனது சிந்தனை, செயல்பாடுகள் என்பனவற்றை தமிழ் மக்களின் விடிவுக்காக செலவு செய்தார்.

இவர் கருத்து முரண்பட்ட பலருடனும் நட்புடன் பழகினார். ஈழத்தில் அனேகபிரதேசங்களுக்குச்

**நேயன்**

சென்று தனது அரசியல் நடவடிக்கைகளைச் செய்தவர் இவர். இவரின் அரசியல் நடவடிக்கைகளால் இவர் அரசபடைகளாலோ அல்லது தமிழ் அயுததாரிகளாலோ தனது மரணம் நிகழலாம் என நினைத்தார். ஆனால் கல்லீரலில் ஏற்பட்ட புற்று நோயினால் மரணிக்க நேர்ந்தது.

தனது மரணத்தின் நாட்கள் நெருங்கி விட்டபோதும் இவர் அஞசவில்லை. கடைசியாக புஸ்பராஜாவிற்க்கு மாற்றுக்கல்லீரல் பொருத்தும் முயற்சியையும் அவரது உடம்பு தாங்காது என்ற காரணத்திற்காக மருத்துவர்கள் கைவிட்டு அவரது கடைசி நாட்களை சொந்த மண்ணிலேயே சென்று கழிக்கும் படி சொல்லிவிட்டார்கள்.

ஏனக்கேது சொந்தமண்? நான் எங்கே செல்லமுடியும?. நாளை அமையவிருக்கும் தமிழ் ஈழத்தைக் காண நான் உயிரோடிருக்க மாட்டேன். நான் பிறந்தமண்ணே “நான் வாழமுடியாத மண்ணே” ஒரே ஒரு கேள்வி உன்னிடம், வெடி மருந்து வீச்சில்லாத உன் தெருக்களில் எம்பிள்ளைகள் நடக்கும் நாள் என்று வரும் எம் மண்ணே?

தமிழினத்தையும் தாயக மண்ணையும் நேசித்த புஸ்பராஜா, அன்னிய மண்ணில் (பிரான்சில்) 10.03.2006 அன்று தனது 56 வது வயதில் மரணத்தை தழுவிக்கொண்டார். ஆயுதப் போராட்டத்தின் தொடக்கப் புள்ளியொன்று முற்றுப்புள்ளியாகிவிட்டது.

- நேயன் -



*20 வருடங்களுக்கு முன்பு புஸ்பராஜா - ஈழவிடுதலை இயக்கத்தின் ஆரம்பகால உறுப்பினர், வரதராஜபெருமாளுடன்*

# ஏமாறாதே! ஏமாறாதே!! ஏமாற்றாதே! ஏமாற்றாதே!!

கடந்த உதயம் இதழில் (மார்ச் 2006) சென்னை மணிமேகலை பிரசுரம் தறித்து சி தகவல்களை எழுதியிருந்தேன். “திண்ணை” இணைய இதழ் இந்த ஆக்கத்தை மறுபதிப்புச் செய்திருந்தது.

பல விடயங்கள் அம்பலமானதன் பின்புதான் ஒரு நுகர்பொருள், வியாபாரப் பண்டம் அல்ல, இலக்கியத்தை வியாபாரமாக்கப்புறப்படும் பொழுது, அதன் படைப்பாளிக்கு ஆதாயம் இல்லமல், பதிப்பகத்திற்கு நிகரலாபம் கிடைப்பது தான் - தமிழ் உலகில் எழுதப்பட்ட விதி.

கனடா, ஐரோப்பாவில் வாழும் தமிழ் மக்களுடைய எண்ணிக்கையுடன் ஒப்பிட்டுப்பார்த்தால் - அவுஸ்திரேலியவில் தமிழ்மக்கள் சொற்பம்தான்.

இந்தக்கண்டத்திலேயே, மணிமேகலை பிரசுராலயத்தினர் - இப்படி நடந்து கொள்கிறார்கள் என்றால் கனடா, மற்றும் ஐரோப்பிய நாடுகளில் எவ்வாறு தமது வியாபாரத்தை கச்சிதமாகச் செய்கிறார்கள் என்ற உண்மை துலக்கமாகும்.

மணிமேகலை பிரசுரத்திடம் ஏமாந்த பலர் - அந்த கசப்பான உண்மைகளை வெளியே சொல்லத்தயங்கினாலும் - சிலர் சொன்ன செய்திகள் வியப்பானவை.

ரவிதமிழ்வாணனிடம், இயல்பான ஒரு பழக்கம் உண்டு, ஒரு நபரை சந்தித்தால், பேச்சு, கலந்துரையாடலுகளுக்கிடையே, மேலும் பலரது தொலைபேசி இலக்கங்களை பெற்றுவிடுவார். அத்துடன் சந்திக்கும் நபரின் பின்னணி, பூர்வீகம் முதலான தகவல்களையும் திரட்டிக் கொள்வார்.

தம்வசம் கிடைக்கும் தொலைபேசி இலக்கங்கள், முகவரிகள், அறிமுகங்களை வைத்துக்கொண்டு, மேலும் பலரது தொடர்புகளை முன்னறிவித்தல் இன்றியே (கதவு தட்டி) ஏற்படுத்திக் கொள்ளுவார்.

மணிமேகலை பிரசுரத்தின் வியாபார தந்திரத்தின் 'Network" எப்படியும் இருந்துவிட்டுப் போகட்டும். ஆனால், ஈழத்தமிழ் எழுத்தாளர்களிடமும், புலம் பெயர்ந்து வாழும் ஈழத்தமிழ் மக்களிடமும் இதே Network மூலம், தமது வர்த்தக தந்திரத்தை வளர்த்துக் கொண்டிருப்பதுதான் சகிக்கமுடியாதது.

ஒருநபரின் புத்தகத்தை பதிப்பித்தால், அதனை உரியவருக்கு சேர்ப்பித்துவிடுவதுடன் இந்தப்பிரசுரத்தின் பணி நின்று விடுவதில்லை. வெளியீட்டு வழாக்களை நடத்தி குறிப்பிட்ட புத்தகத்திற்குரித்துடையவர்களின் சொந்தபந்தங்களின் நட்புகளின் ஆதரவுடன் கிடைக்கும் சிறப்புப்பிரதி நன்கொடைகளை “சுருட்டி”க் கொள்ளும் தமிழ் சேவையாளரை நாம் எந்த ரகத்தில் சேர்ப்பது.

இலங்கையில் கொழும்பில், மலையகத்தில், கிழக்கு மாகானத்தில், இவ்விதம் பல எழுத்தாளர்களின் புத்தக விற்பனைப்பணம் சுருட்டப்பட்டிருப்பதாக தகவல்கள் உண்டு.

ஈழத்தமிழ் மக்களிடம் உண்மையான அபிமானமும் நேசமும், அவர்கள் சந்தித்த துன்பங்களினால் அனுதாபம் இருக்குமானால், மணிமேகலை பிசுராலயம், அங்கே தனது

**முருகபூபதி**

நூல்களை வெளியிட முடியாமல் கஷ்டப்படும் ஏழை எழுத்தாளர்களுக்கு நூல்களை வெளியிட்டுக்கொடுத்திருக்க வேண்டும். அப்படி ஏதும் நடந்ததாகத் தெரியவில்லை.

ஆனால், லண்டனில் வசிக்கும் ஈழத்தவரான தமிழினிகுலேந்திரனிடம் பணம் வாங்கி இலங்கையர் சிலரது புத்தகங்களை வெளியிட்டுள்ளது மணிமேகலை பிரசுரம்.

அவுஸ்திரேலியாவில், தமிழ் சீர்திருத்த எழுத்துக்களை “சீடி” யில் தரப்போவதாக பல வருடங்களாக சொல்லிக் கொண்டிருக்கும் தமிழ்ப்பற்றாளர் மருத்துவர் பொன். சத்தியநாதனின் பணத்தில், தமிழ்நாட்டில் ஏற்கனவே வெளியான பல திருக்குறள், திருவள்ளுவர் சம்பந்தப்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளது இப்பிரசுராலயம்.

அத்துடன், இலங்கையில், தமிழ்ப்பிரதேச நூல்நிலையங்களுக்கு, தரக்குறைவான மர்மநாவல்களுடன் பல நூல்களை விநியோகிப்பதற்கும், அவுஸ்திரேலியாவில் பல தமிழ் புத்தகஸ்தாபனங்களை அனுகியுள்ளது.

ஈழத்தமிழ் மக்கள் பிரதேச மொழி இலக்கியத்தையும், மண்வாசனை கமழும் தேசியதமிழ் இலக்கியத்தையும் போர்க்கால இலக்கியத்தையும் படித்துக் கொண்டிருக்கும் போது, தமிழ்வாணனின் மர்மநாவல்களை, அங்கே புகுத்துவதற்கும், புலம்பெயர்ந்த தமிழ் வர்த்தக அன்பர்களை நாடுகிறது ரவிதழிழ்வாணனின் NETWORK.

# கவிஞர்களுக்காக..

அவுஸ்திரேலியாவில் வதியும் தமிழ்க் கவிஞர்களின் தொகுப்பை வெளியிடுவதற்காக அவுஸ்திரேலிய தமிழ் இலக்கிய கலைச்சங்கம் (Australian Tamil Literary & Arts society) கவிஞர்களிடமிருந்து கவிதைகளை எதிர்பார்க்கின்றது.

ஒவ்வொரு கவிஞரும் இரண்டு கவிதைகளை அனுப்பி வைக்கலாம். புலம் பெயர்வாழ்வு , தலைமுறை இடைவெளி , முதியோர் - இளையோர் விவகாரம் , பெண்கள் நிலை , பல்கலாச்சார சூழல் , இன அடையாளம் , இயந்திர வாழ்விலும் இயங்கியல்தன்மை , பருவகாலம் முதலான கருப்பொருள் உள்ளடக்கப்படும் தமிழ்க் கவிதைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.
கவிஞர்கள் கைப்பட இரண்டு பக்க தாள்களிலும் (Foolscap paper) எழுதியோ அல்லது கணினியில் அச்சடித்தோ அனுப்பலாம். கவிஞர்கள் இரண்டுக்கு மேற்பட்ட கவிதைகளை அனுப்பியிருப்பின் அவற்றுள் ஒவ்வொரு கவிஞரினதும் தேர்ந்தெடுக்கப்பட்ட 2 கவிதைகள் மட்டுமே கவிதைத் தொகுப்பில் இடம்பெறும்.

கவிதைகளை எதிர்வரும் ஏப்ரில் 30 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்ப வேண்டும் :

அனுப்பவேண்டிய முகவரி :
L.Murugapoopathy,
170, Hothlyn Drive ,
Craigieburn – 3064, VICTORIA.

தொலைபேசி: (03) 93081484

இக்கவிதைத் தொகுப்பு 2007 ஜனவரியில் நடைபெறவிருக்கும் எழுத்தாளர் விழாவில் வெளியிடப்படும்.

PERTH
MALAR STORES
*Open 7 Days*
35A Canara Road,
Westminister,
WA 6061
08 9440 0420
VIDEOS & GROCERIES